# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 03 வியாழக்கிழமை (19-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:259


# அமைச்சரவை இன்று பதவி ஏற்கிறது!

கொழும்பு,ஒக்.19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் 40 பேர் கொண்ட அமைச்சரவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் இன்று காலை சுபநேரமான 9 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்யவிருக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள தேசிய ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகியன விதித்த நிபந்தனைகள் காரணமாக அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

தேசிய ஐக்கிய முன்னணி பேரியல் அஷ்ரப் அணி என்றும், ரவூப் ஹக்கீம் அணி என்றும் இரண்டாகப் பிளவுபட்டதால் அமைச்சரவை அமைப்பதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்கள் மேற்கொண்ட முயற்சி காரணமாக இரு அணிகளுக்குமிடையில் இணக்கநிலை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சுமுகமான சூழ்நிலையில் அமைச்சரவை இன்று பதவிப்பிரமாணம் எடுக்க இருக்கிறது.

முன்னைய அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் புதிய அமைச்சரவையிலும் இடம்பெறவுள்ளனர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சும் -

தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு கிழக்கு மாகாண

(10ஆம் பக்கம் பார்க்க)

# புதிய நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்விலேயே அவசரகாலச் சட்டம் நீடிப்பு!

## தமிழ்க் கட்சிகளில் ஈ.பி.டி.பி. மட்டும் ஆதரவாக வாக்களிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்19

**இலங்கையின் பதினொராவது நாடாளுமன்றம் - புதிய நாடாளுமன்றம் - நேற்றுத் தனது முதலாவது அமர்வில் செய்த பணி, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிக்கும் பிரேரணையை 94 வாக்குகளால் நிறைவேற்றியதே ஆகும்!**

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவசரகாலச் சட்டப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. கட்சி அங்கத்தவர்கள் ஆதரித்து வாக்களித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் வாக்களிப்பு நேரத்தில் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை. ஜே.வி.பி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

புதிய நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 2.30 மணிக்குக் கூடியது. முதலில் நாடாளுமன்றத்தின் செயலாளர்நாயகம் டம்பிக இத்துல் கொட

(10ஆம் பக்கம் பார்க்க)

## சபைத்தலைவராக றிச்சர்ட் பத்திரன

கொழும்பு,ஒக்.19

நாடாளுமன்றத்தின் சபைத் தலைவராக முன்னாள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார். (இ-10)

## செம்மணியில் 2 படையினர் பலி 7பேர் காயம்

கொழும்பு,ஒக்.19

செம்மணி முன்னரங்க நிலைகளுக்குப் படையினரையும், உணவுப் பொருள்களையும் ஏற்றிச்சென்ற டிராக்ரர் ஒன்று டாங்கிகளைத் தகர்க்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரிகளை பிடிக்கப் பொலீஸார் தேடுதல்!

### புதிய எம்.பிக்களைத் தாக்கத் திட்டமாம்

கொழும்பு,ஒக்.19

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள நாடாளுமன்றம் சென்ற அரசியல் பிரமுகர்களை இலக்கு வைத்து கொழும்பு நகரினுள் மூன்று தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பின் பல்வேறு பகுதிகளும் பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இந்தத் திடீர் நடவடிக்கை குறித்து கொழும்பு மாவட்டப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவிக்கையில் -

தமது இராணுவப் புலனாய்வு வட்டாரங்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து இந்தத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார். (இ-8)

## இன்றைய கப்பல் சேவை ரத்து கடல் கொந்தளிப்பு காரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெறவிருந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கடும் காற்று, சூறாவளி, கடற்கொந்தளிப்பு ஆகிய காரணங்களால் இந்தக் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது என்றும் -

எப்போது மீண்டும் இந்தச் சேவை ஆரம்பமாகும் என்ற விவரம் தெரியவரவில்லை என்றும் - சிவில் நிர்வாக அலுவலகம் மேலும் தெரிவித்தது. (இ-3)

## சபாநாயகராக அனுரா போட்டியின்றித் தெரிவு

### சரத் முனசிங்கா உப சபாநாயகர்

கொழும்பு,ஒக்.19

பதினொராவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தம்பியுமான அனுரா பண்டாரநாயக்கா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக நாடாளுமன்றம் கூடியபோது முதலில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அனுராவின் பெயரைப் பிரேரித்தார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதை ஆமோதித்தார்.

வேறு எவரும் போட்டியிடாத காரணத்தால் அனுரா பண்டாரநாயக்கா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அரசு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசைகளில் தட்டிக் கரகோஷம் எழுப்பி அவரை வரவேற்றனர்.

பிரதமரும், ரணிலும் அவரை அழைத்துச்சென்று சபாநாயகர் ஆசனத்தில் அமரச் செய்ததை அடுத்து பிரதிச் சபாநாயகருக்கான தெரிவு இடம்பெற்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடா

(10ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா - மன்னார் வீதியில் புலிகள் நேற்றுத் தாக்குதல்!

## 3படையினர் உயிரிழப்பு, இருவர் காயம்

வவுனியா - மன்னார் வீதியில் பறையனாளங்குளத்துக்கு அண்மையில் மல்வத்தை கணேசபுரம் பகுதியில் அமைந்துள்ள முகாம் மீது நேற்று அதிகாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 3படையினர் உயிரிழந்தனர்; இருபடையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த முகாமில் 40 படையினர் பணிபுரிவது வழக்கம் என்றும் தாக்குதல் நடந்த சமயம் முகாமில் 7 பேரே இருந்தனர் என்றும் ஏனையோர் பாதுகாப்புக் கடமைக்காக முகாமுக்கு வெளியே பணியாற்றிக் கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் புலிகளின் வீடியோ படப்பிடிப்பாளர் காயமடைந்தார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து நேற்று காலை 7மணிமுதல் பம்பைமடு, பத்தினியார் மகிழங்குளம் ஆகிய இடங்களில் உள்ள படை நிலைகளிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் புலிகளின் திட்டம் முறியடிப்பு

### சபையில் பிரதமர் ரத்னசிறி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.19

யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றும் விடுதலைப்புலிகளின் திட்டத்தை அரசு முறியடித்துள்ளது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடக்கில் எந்தவொரு பகுதியையும் மீளக்கைப்பற்ற முடியாத நிலையில் விடுதலைப்புலிகள் உள்ளனர். அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்த சில பகுதிகளைப் படையினர் கைப்பற்றியிருந்தனர். அந்தப் பகுதிகளை மீளவும் கைப்பற்றப்புலிகள் முயன்று

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளே தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் அதனை ஏற்று அவர்களுடன் பேசுக!

## நாடாளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்

கொழும்பு,ஒக்.19

வடக்கு-கிழக்கில் நடைபெறும் போரை உடனடியாக நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதன்பின்னர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் நாட்டில் சமாதானம் ஏற்படமுடியாது.

இதனை வற்புறுத்துவதற்காகவே எமது கட்சி பொதுத்தேர்தலில் போட்டியிட்டது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கன்னிப் பேச்சில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி கூறினார்.

அரசாங்கத்தை தமிழர்கள் ஆதரிக்கவில்லை. இந்த உண்மையை மறைத்து தமிழரின் ஆதரவு தனக்கு உண்டு என்று அரசாங்கம் பொய்ப் பிரசாரம் செய்து வந்தது. அதனை அம்பலப்படுத்த வேண்டும் என்பதனாலேயே நாம் பொதுத் தேர்தலில் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டோம் - என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட எம்.பியான அ. விநாயகமூர்த்தி தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

மூத்த பழம் பெரும் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதியாக இந்த நாடாளுமன்றத்தில் இருப்பதில் பெருமைப் படுகின்றேன்; மகிழ்ச்சியடைகிறேன்.

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தைச் சேர்ந்த

**திரு.ப.ஜெயநாதன்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **யோகம்மா பரமநாதன்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

**உதவி அரசாங்க அதிபரும்,**
**உத்தியோகத்தர்களும்,**
**வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை.**

(79635)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்

**'சண்லைற்' எஸ்.சிவநாதன்** அவர்களின் தாயார்

திருமதி **செல்லம்மா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

**நண்பர்கள்,**
**யாழ்.நகர்.**

(C/13457)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லப்பா சதாசிவம்

(ஒப்பந்தகாரர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்.
உரிமையாளர் - சதாஸ் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)

தோற்றம் 02.05.1928 — மறைவு 08.10.1990

திதி : 19-10-2000

ஐப்பசி மாத அபர பக்ஷ ஸப்தமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

'ராஜபவனம்"
*206, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/13453)

# 54ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 01 - 1920



மறைவு 28 - 08 - 2000

## அமரர் குட்டிப்பிள்ளை சின்னத்துரை

அவர்கள் 28.08.2000 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்ததை அறிந்து நேரிலும் தபால் மூலமும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (20.10.2000) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**தகவல்:**

**திரு.திருமதி பா.கிருஷ்ணானந்தம்**
**குடும்பத்தினர்.**

*அம்பாள் மருத்துவ நிலையம்,*
*சந்நிதி வீதி,*
*உடுப்பிட்டி.*

(79623)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணம் உயர்தர தொழில்நுட்ப நிறுவனத்தில் 97ஆம் ஆண்டுக்கு முன் பதிவு செய்து பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சைகளில் தோற்றி சித்திபெறத் தவறிய மற்றும் நூன சித்திபெற்றுப் பரீட்சையைப் பூரணப்படுத்த இயலாதுபோன மாணவர்களை உடனடியாகத் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுள்ளார். (இ-3)

## செய்முறைப் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.19

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட அழகியல் தொழில்நுட்பப் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சையில் இதுவரை தோற்றாத மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை வடமராட்சி, வலிகாமம் பகுதியில் நடத்துவதற்கு வலய அலுவலகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் வடமராட்சிப் பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 28ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், வலிகாமம் பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நவம்பர் 4ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் செய்முறைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

மேற்படி செய்முறைப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளுக்கு பாடசாலைகளின் அதிபர்களும் அந்தப் பாட ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (இ-117)

## கூரை ஓடுகள் திருட்டு

காரைநகர்,ஒக்.19

மண்கும்பான் அ.த.க.பாடசாலையைப் புனரமைப்பதற்காக புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை வளவினுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கூரை ஓடுகள் பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையின் புனரமைப்புக்காக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் நிதி உதவி வழங்கி உள்ளது.

இதேவேளை மண்கும்பானில் உள்ள ஆள்கள் இல்லாத வீடுகளின் கூரை ஓடுகள், மரங்கள் என்பன அண்மைக் காலமாகத் திருடப்பட்டு வருகின்றன. இந்தத் திருட்டைத் தடுப்பதற்கு இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது. (இ-73)

## சட்டவிரோத மதுபான விற்பனை

காரைநகரில் சட்டவிரோதமாக இயங்கிவரும் மதுபானக் கடைகளால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

அனுமதி இன்றி சில பலசரக்குக் கடைகளில் மதுபானம் விற்கப்பட்டு வருகின்றது. இதனால் வீதிகளில் போக்குவரத்துச் செய்வோரும் கடைகளுக்குப் பொருள்கள் வாங்க வருவோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (இ-73)


**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**

**விஜய், ஜோதிகா, விஜயகுமார்** மற்றும் பலரின் நடிப்பில்

**குஷி**

காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)

(C/13461)

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**

**பிரசாந்த், ரம்பா, லிவிங்ஸ்டன், ராதாரவி** நடித்த

**பூமகள் ஊர்வலம்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

(79633)


# மரண அறிவித்தல்கள்

## குமாரு பூலோகம்

சுழிபுரம் கிழக்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு பூலோகம் நேற்றுமுன்தினம் (17-10-2000) செவ்வாய் கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற குமாரு செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜெயலலிதா (ஜேர்மனி), சசிகலா (பிரான்ஸ்), சிவாஜினி, முருகானந்தன் (பிரான்ஸ்), கணேசானந்தன், தணிகைக்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வயிரவநாதன் (ஜேர்மனி), வடிவேலு (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், வீரமாறன், வேனுகா, வேல்மாறன், ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை (சோதிடர்), சின்னத் தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கதிரவேலு தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும், செல்வரத்தினம், இராசரத்தினம், பூலோகம், பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (19-10-2000) வியாழக்கிழமை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

**பூ.கணேசானந்தன்**
**(மகன்)**

(79630)

## திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை வெவசற் பிளேசை தற்காலிக வசிப்பிடமாக கொண்டவருமாகிய திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் 17-10-2000 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற றங்கூன் பென்சனர் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், பரமநாதன், பத்மாதேவி, நடேசன்(U.K), பத்மநாதன் (கதிர் - கொழும்பு), கமலாதேவி (மீனா - கொழும்பு) பாலநாதன் (கண்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னத்தங்கம், பாலசிங்கம், பொன்மலர் (U.K), இராஜேஸ்வரி (கொழும்பு), மகாலிங்கம் (கொழும்பு), ஞானா (கண்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாபரன், வனஜா, சுகுணா, கோமதி (U.K), வசீகரன் (U.K), அனுராதா (கொழும்பு), ஆரணி (கொழும்பு), இரமணன் (கொழும்பு), மதுரன் (கொழும்பு), சுமங்கலா (கொழும்பு), பினோஜ் (கண்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் நாளை (20-10-2000) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 21-10-2000 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

*50,கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு ,*
*கொக்குவில்.*

**சு.பரமநாதன்**
**(மகன்)**

**கொழும்பு தொலைபேசி எண்:- 01-595422, 01-589310** (79631)

## திருமதி அன்னலெட்சுமி செல்வராஜா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது இடம் பெயர்ந்து நவாலி கிழக்கில் வசிப்பவருமான அன்னலெட்சுமி செல்வராஜா நேற்று (18.10.2000) புதன்கிழமை காலமானார்.

இவர் காலம் சென்ற இராமலிங்கம் செல்வராஜா (இளைப்பாறிய அதிபர்) அவரின் அன்பு மனைவியும் செல்வநாதன் (ஜேர்மனி), செல்வநாயகி, செல்வமாலினி (பிரான்ஸ்), செல்வவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் முருகானந்தம் (யாழ்.ப.நோ.கூ.சங்கம்) அன்பு மாமியாரும் சேந்தனின் (பிரான்ஸ்) அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நவாலி கிழக்கு கந்தகோட்டத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்:**

*நவாலி கிழக்கு,*
*முருகமூர்த்தி கோயிலடி,*
*மானிப்பாய்.*

**திரு.திருமதி முருகானந்தம்**

*(79632)*

## சின்னையா திரவியம்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திரவியம் அவர்கள் நேற்று (18.10.2000) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும் சிறீதரனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2000) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் தம்பாலை இந்த மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்:**

*தம்பாலை.* *(C/13458)* **செ.கந்தசாமி (மணியம்)**

## சூசைப்பிள்ளை திருச்செல்வம்

(சம்மாட்டி)

போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை திருச்செல்வம் (16.10.2000) திங்கட் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பா - தங்கரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், ராசகிளியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - போணபேத்துவின் மருமகனும், வின்சன் (கொழும்பு, றோசாறி (கொழும்பு), எட்வின் ஜோசப் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஸ்ரலின் (கனடா), விஜி (கனடா), யோன்சன் (கனடா), நெல்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், யூக்கிறேசியா (கனடா), அன்பு (கனடா), சுபத்திரா (கனடா) சசி (கனடா) ஆகியோரின் மாமனாரும், வினோ, டாறியா, சுகன்யா, பிரியங்கா, பிறண்டன், கனா, கிசோர் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கீதபொன்கலன், ராசிங்கம் (கொழும்பு), புஸ்பராசா (கனடா), அன்னக்கிளி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று (18.10.2000) புதன்கிழமை கனடாவில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக (21.10.2000) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு போயிட்டி, இளவாலை லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**தகவல்:**

*பெரிய குருமடம்.* (79636) **இ.பாஸ்கரன் (மருமகன்)**

## செய்திச் சரம்

### வங்கிக் கரும நாள்கள்

வண்ணார்பண்ணை,ஒக்.19

பருத்தித்துறையில இயங்கிவரும் சாவகச்சேரி இலங்கை வங்கியின் கிளை, ஒவ்வொரு வாரத்திலும் செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்கள் மட்டுமே கருமமாற்றுமென வாடிக்கையாளர்களுக்கு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-74)

### சிறு வணிக முகாமைத்துவ பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.19

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட 1999 கல்வியாண்டு சிறு வணிக முகாமைத்துவப் பரீட்சையில் யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றியவர்களில் 12 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சை முடிவுகள் யாழ் திறந்த பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 22 பேர் தோற்றினார்கள். இவர்களில் 12 பேர் 6 பாடங்களிலும் 4 பேர் 5 பாடங்களிலும் ஏனையோர் நூனசித்தியும் அடைந்துள்ளனர். (ஐ-5-ரி)

### காரைநகரில் கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.19

காரைநகர் புதுரோட்டுச் சந்தியில் கடந்தவாரம் இனந்தெரியாதோரால் தனியாருக்குச் சொந்தமான இரண்டு வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக உரிய சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவருமான ந.திரிலோகநாதன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் காரைநகர் கடற்படை கட்டளை அதிகாரி மற்றும் ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடனும் தொடர்பு கொண்டுள்ளார். (ஐ-7)

### மாணவர்களுக்கு வரவேற்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு விழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விவசாயபீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

### செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.19

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்திலிருந்து ஜி.சீ.ஈ (சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

சங்கீத பாடத்துக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்றும் நாளை வெள்ளிக்கிழமையும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் காலை 9.30 மணிக்கும் -

விவசாய பாடத்துக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 12.30 மணிக்கும் - நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் எஸ்.சிவபாதசுந்தரம் கேட்டுள்ளார். (இ-10-5)

### நெடுந்தீவில் கடும் மழை

யாழ்ப்பாணம்,ஒக்.19

நெடுந்தீவில் கடந்த ஞாயிறு இரவு பெய்த கடும் மழை மற்றும் புயற்காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

அதேவேளை மின்விநியோகக் கம்பிகள் அறுந்ததினால் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது. (இ-7)



கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி செல்வி பிரமியா சிவபாதகுணம் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டதைப் பாராட்டி அண்மையில் மேற்படி பாடசாலையில் வைபவம் ஒன்று இடம் பெற்றது. வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் இராஜேந்திரன் செல்வி பிரமியாவுக்கு தங்கப் பதக்கம் அணிவிப்பதை முதலாவது படத்திலும் பாடசாலையின் சாரணீய இயக்கத்துக்கென லண்டன் வாழ் பழைய மாணவர்களால் சேகரித்து அனுப்பப்பட்ட 25 ஆயிரம் ரூபாவை பழைய மாணவர் சங்கப் பொருளாளர் ச.செந்தூரன் பாடசாலை அதிபர் மு.அனந்தேஸ்வரனிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தேசிய அரசுக் கோரிக்கை தென்பகுதியில் வலுக்கிறது

கொழும்பு,ஒக்.19

நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து அரசமைப்பதில உள்ள சிக்கல் நிலையைத் தீர்க்க வசதியாக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுவடைந்து வருகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும் ஐ.தே.கட்சியையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்து வருகின்றனர் என்றும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமையும் இந்தக் கோரிக்கையில் நாட்டம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் - தாய்நாட்டைக் காக்கும் அமைப்பின் தலைவர் முத்தெட்டுவே ஆனந்த தேரர் இதுவிடயமாக ஜனாதிபதிக்கு கடந்த புதன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இன்றுள்ள நிலையில் நாட்டின் இறைமையைக் காக்க தேசிய அரசாங்கம் அமைப்பது ஒன்றே வழியாகும். இதன்மூலமே நாட்டைக் காக்க முடியும் என்று அவர் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (இ-3)

# 117 பெண் வேட்பாளர்கள் கடந்த தேர்தலில் போட்டி!

## ஆனால் 8 பேரே தெரிவு செய்யப்பட்டனர்

இலங்கை வரலாற்றில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலிலேயே அதிக எண்ணிக்கையான பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 117 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டபோதிலும் எட்டுப் பேரே நாடாளுமன்ற உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் சுமேதா ஜி.ஜெயசேன, முன்னாள் பிரதி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஐ.தே.கட்சியின் குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரசிரீலி ரத்னாயக்க, ஐ.தே.கட்சியின் அநுராதபுர மாவட்ட வேட்பாளர் சந்திராணி பண்டார, திகாமடுல்லவில் போட்டியிட்ட தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் பேரியல் அஷ்ரப், பொ.ஐ.முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் சோமகுமாரி தென்னக்கோன், பொ.ஐ.முன்னணி யின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் சிரியாணி பெர்னாண்டோ மற்றும் பொ.ஐ.முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் சுராங்கனி எல்லாவல ஆகியோரே நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பெண்கள் ஆவர்.

இவர்களில் பேரியல் அஷ்ரப், சுராங்கனி எல்லாவல, சோமகுமாரி தென்னக்கோன், சிரியானி பெர்னாண்டோ,சந்திராணி பண்டார ஆகிய ஐவரும் முதன்முதலாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள்.

இந்த முறை,பொ.ஐ முன்னணி 14 பெண் வேட்பாளர்களையும், ஐ.தே.கட்சி 8 பெண்வேட்பாளர்களையும் ஜே.வி.பி மற்றும் பிற அரசியல் கட்சிகள் 94 பெண் வேட்பாளர்களையும் பொதுத் தேர்தலில் நிறுத்தியிருந்தன.

லிபரல் கட்சி தனது தேசியப்பட்டியலில் கூடுதலான பெண்களுக்கு இடம் ஒதுக்கியது.

இதே வேளை -

முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்னாயக்க, முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ,களுத்துறை மாவட்ட உணவு மற்றும் வர்த்தகத்துறைப் பிரதி அமைச்சர் சுமித்ரா பிரியங்கனி அபயவீர ஆகியோர் இந்த முறை தேர்தலில் தோல்வி அடைந்தனர்.

அத்துடன் பெண் வேட்பாளர்களான சுனேத்ரா ரணசிங்க,கல்யாணி வீரசிங்க, முன்னாள் அமைச்சர் ரேணுகா ஹேரத், வீமலி கருணாரத்ன, ஷீலா யாப்பா, பத்ம வெற்றவா, அனுல பஸ்நாயக்க,சமந்த கருணாரத்ன, ஆர்.புலேந்திரன்,சம்பா கலுகல்ல,இந்திராணி கலுகல்ல, ஸ்ரீமாணி அத்துலத் முதலி, சுவநீதா குணரத்ன ஆகியோரும் நடந்து முடிந்த தேர்தலில் தோல்வி அடைந்தனர். (இ-8)

### யாழ்.ஆஸ்பத்திரியில் நினைவு தினம்

யாழ்.குடாநாட்டில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலப் பகுதியில் - யாழ். ஆஸ்பத்திரியில் - இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 21 ஆஸ்பத்திரி ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் 13ஆம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட உள்ளது.

அன்றைய தினம் யாழ்.ஆஸ்பத்திரியில் சமய நிகழ்வுகள், நினைவு தின நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

### சாவகச்சேரி இந்து அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் ஐவரின் தேசிய அடையாள அட்டைகள் கல்லூரி அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கும் இக்கல்லூரியில் இந்த அடையாள அட்டைகளை சம்பந்தப்பட்ட மாணவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டை கிடைக்கப் பெற்ற மாணவர்களினது விவரம் வருமாறு:-

கனகரத்தினம் றஜினிகாந்தன் (இத்தாவில்), கனகரத்தினம் சிவசுதன் (மீசாலை), சண்முகரத்தினம் சதீசன் (சாவகச்சேரி), அருமைநாயகம் வருணன் (சாவகச்சேரி) கைலாயபிள்ளை றஜீவ் (அல்லாரை வடக்கு) (இ-5)

# யாழ். மாநகர சபை வெற்றிடங்கள் பதவிஉயர்வு மூலம் நிரப்பப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.மாநகரசபையில் உள்ள ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளகப் பதவி உயர்வுகள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாக ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தெரிவித்தார்.

சுமார் 50 பேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அடுத்தமாதம் முதலாம் திகதி தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சாயிசிந்தனை



அன்பே கடவுள்! அன்புத் தளிரிலிருந்து சேவை என்னும் மொட்டுவிட்டு பக்தியாக மலர்கிறது. நீருக்குத் தண்மையும் நெருப்புக்கு வெம்மையும் போல மானிடருக்கு அன்பு இயற்கையானது. அன்புள்ளோர் நல்லமக்கள். அன்பிலார் பொல்லா மக்கள். அன்பெனும் விளக்கணைந்தால், பொறாமை எனும் இருள் சூழும். ஆண்டவனிடம் அன்பு செலுத்துதல் என்பது எல்லோரிடமும் தெய்வீகம் காணுதல். ஆண்டவனை அடைவதற்கு சுருக்கமான வழி, பண்பெனும் ஜல்லி பரவி, அன்பெனும் தார்போட்ட அழகிய சாலை. ஆகவே நாளை என்பது நம்பிக்கையில்லை. நல்லவை நினைத்தால் அக்கணமே அவைகளை செய்யத் தொடங்குக.

அன்பு என்பதன் மூலமே உலகத்தை ஆளமுடியும். அதன் அடித்தளத்திலிருந்து தான் உலகமே இயங்குகிறது. இந்த அன்பு ஒன்றின் மூலம் நாம் சந்தோஷமாகவும் சுபீட்சமாகவும் வாழ முடியும்.

*ஆதாரம்: சாயி போதனை*

### அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த ஜி.சீ.ஈ.(சாதாரண தர) மாணவர்களுக்கான விவசாய, மனையியல், சங்கீத பாட செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்தப் பாடசாலை மாணவர்களைச் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில்

கொழும்புத்துறை,ஒக்.19

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் சி.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

சிறுப்பிட்டி ஆசிரியர் ச.நவரத்தினராசாவின் அறிமுக உரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி "சைவம் ஒரு வாழ்க்கை முறை" என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (இ-30)

### விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க 'ஏ' பிரிவின் மாதாந்த கருத்தரங்குத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் மண்டபம் - 1இல் நடைபெறும்.

'தல்லைமைத்துவப் பண்புகள்' என்ற தலைப்பில் லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ். பத்மநாதன் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவார். (இ-173)

### எம்.பிக்களாக மாகாண சபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

கடந்த தேர்தலில் போட்டியிட்ட மாகாணசபை உறுப்பினர்களில் 40 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். அவர்களில் மேல் மாகாணசபையிலிருந்து மிகக் கூடுதலாக 11 பேரும் தென்மாகாண சபையில் இருந்து 8பேரும் அடங்குவர். (இ-173)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் அடுத்த ஆண்டில் 24 பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் 2001 கல்விஆண்டுக்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

24 பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்கள் நவம்பர் 25ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

பொருத்து பொறி இயக்கவியலாளர், மின்னியலாளர், மோட்டார் வாகனம் திருத்துதல், கட்டட நிர்மாண தொழில், குடிசார் எந்திரவியல், மின்னியலும் இயந்திரவியலும், பொறிமுறை எந்திரவியல், கணிய அளவை, தேசிய சான்றிதழ் ஆங்கிலம், தேசிய சான்றிதழ் சந்தைப்படுத்தல், கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர், எந்திரவியல் தொடர்பான படவரைதல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும (தமிழ், ஆங்கிலம்), வாயு மற்றும் மின் காய்ச்சி இணைத்தல் (வெல்டிங்), மின்கம்பி இணைத்தல், டிரக்டர் தொழில் நுட்பம் (உழவியந்திரம்), விவசாய உபகரணம் பராமரிப்பும் திருத்துதலும், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களே தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் எந்திரவியல் தொடர்பானவை மாலை நேரங்களிலும் ஏனையவை பகல் நேரங்களிலும் நடைபெறவுள்ளன. (இ-5-ரி)

# நவாலி முதலியார் குளம் அமைப்பு

# வேலை பூர்த்தி அடையும் நிலையில்!

## வழுக்கை ஆற்று நீரைத் தேக்கி வைக்கத் திட்டம்

சண்டிலிப்பாய், ஒக். 19

பெருமழை பெய்யும் காலத்தில் வழுக்கை ஆற்றில் வரும் தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்கு பயன்படுத்துவதற்காக நவாலியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ''முதலியார் குளம்'' என்று பெயரிடப்பட்ட குளத்தின் அமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இக்குளத்தின் நிர்மாண வேலைகளுக்காக 15 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் ஒப்பந்த அடிப்படையில் அமைப்பு வேலைகளை செய்து முடித்துள்ளது. தற்போது குளக்கட்டுப் பகுதிகளில் அறுகம்புல் பதிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாரி மழை காலத்தில் அளவெட்டி பிணாக்கைக் குளத்திலிருந்து உற்பத்தியாகும் வழுக்கை ஆறு கந்தரோடை, கட்டுடை, மானிப்பாய், வட்டுக்கோட்டை கிழக்கு, நவாலி ஆகிய இடங்களுக்கு ஊடாகச் சென்று அராலிக் கடலில் சங்கமமாகின்றது. இப்பகுதியிலுள்ள சிறிய குளங்களும் இந்த ஆற்றுடன் வாய்க்கால்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளதால் இப்பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை செழிப்படைந்து வருவது குறிப்பிடத் தக்கது.

ஆயினும் பலத்த மழை பெய்யும் காலத்தில் இந்த மிதமிஞ்சிய ஆற்று நீர் அராலிக் கடலில் போய் விழுந்து வீணாகின்றது. வீணாகக் கடலில் போய் விழும் இந்த நீரைத் தேக்கி வைத்து இப்பகுதி விவசாயத்துக்குப் பயன்படுத்த இப்புதிய ''முதலியார்குளம்'' உதவும் என்று நீர்பாசனத் திணைக்கள வட்டாரங்கள்கூறின.

இதேவேளை இக்குளத்து நீரைப்பயன்படுத்திக்கோடை காலத்திலும் மரக்கறி பயிர்ச் செய்கையை இப்பகுதி விவசாயிகள் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-135)

## பாடசாலைகளுக்கு ஆங்கில நூல்

வலி.வடக்கு, ஒக். 19

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பாடசாலைகளுக்கு பல்வேறு வகையான ஆங்கில நூல்கள் வழங்கப்பட்டுள்ளன

சர்வதேச புத்தக உதவி நிறுவனத்தால் வழங்கப்பட்ட சுமார் 800 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் கொட்டைக்காடு அரசாங்கதமிழ்க்கலவன் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு இப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான நூல்கள் மற்றும் சிறுவர் கதை நூல்கள் உட்பட பல்வேறு வகையான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் ஒரு தொகுதி நூல்கள் வரவுள்ளதாகவும் அவை ஏனைய பாடசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (இ-89)

## குருநகர் மீனவருக்கு நிவாரணம்

குருநகர் மீனவர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

இதன் முன்நடவடிக்கையாக நிவாரணம் பெறவுள்ள மீனவர்கள் அனைவரும் அதற்குரிய உறுதிச்சிட்டைகளில் கையொப்பமிட அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய ஜே/67, 68, 69, 70, 71, 72 ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த மீனவர்களை 5 ரூபா பெறுமதியான முத்திரை, குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் யாழ். பிரதேச செயலர் பணிமனைக்கு எதிர் வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை சமுகம் கொடுக்குமாறு பிரதேச செயலரால் கோரப்பட்டுள்ளது.

சுமார் 1,555 குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படஉள்ளது. (இ-15)

# சிகிச்சைக்கு வந்தவர் நகைகளை இழந்தார்

## யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வந்த பெண் நோயாளி ஒருவர் தமது தங்க நகைகளை இழந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சுழிபுரத்தைச் சேர்ந்த வி. மீரா (வயது 17) என்ற இளம் பெண்ணே தங்க நகைகளை இழந்தவராவார்.

சத்திரசிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் சத்திரசிகிச்சைக்குப் போவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்ட போது, தான் அணிந்துவந்த காப்புகள், சங்கிலி, தோடு ஆகிய பொருள்களைக் கழற்றி தனது கைப்பையில் வைத்தார் என்றும் —

அருகில் உள்ள கட்டில் நோயாளியிடம் கூறிவிட்டு கைப்பையை தனது கட்டிலிலேயே வைத்துவிட்டுச் சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சத்திரசிகிச்சை முடிய வார்ட்டுக்கு வந்து பார்த்த போது கைப்பைக்குள் வைத்து விட்டுச் சென்ற நகைகள் காணாமற் போயிருந்தன. பக்கத்துக்கட்டிலில் இருந்த நோயாளிப் பெண்ணும் துண்டுவெட்டி வீட்டுக்குச் சென்றிருந்தார்.

பொருள்களை இழந்தவர் வெறுங்கையுடன் சிகிச்சையை முடித்துக் கொண்டு வீடு சென்றார். (இ-15)


## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மேற்கு, நாவலடி ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியும், நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு;

ச. ஞானேந்திரன்,
இல. 10, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(79585)


## உதை பந்தாட்டம்

யாழ்ப்பாணம் கல்வி வலய நல்லூர் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும அணிகள் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

அரை இறுதி ஆட்டத்தில் யாழ். இந்து எதிர் பெரியபுலம் ம.வி.

### 18 வயதுப் பிரிவு

★ அரை இறுதிஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டசுற்றுப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ.க. வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி. (இ-86)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இன்று இடம் பெறும் கால் இறுதி ஆட்டங்களில் 18வயதுப்பிரிவில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

### 18 வயதுப் பிரிவு

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் இடைக்காடு ம.வி.

★ அச்சுவேலி ம. வி. எதிர் உரும்பிராய் இந்து.

★ புத்தூர் சோமஸ்கந்தா எதிர் ஊரெழு கணேசா வித்தி

# பிறவுண் வீதி - கலட்டிச் சந்தி ஊடாக விரைவில் பஸ்சேவை

கலட்டிச் சந்தியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து பிறவுண் வீதி கலட்டிச் சந்தி ஊடாக (பாதை இல. 808) வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பஸ்சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

கொக்குவில் பிறவுண் வீதியில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரி, யாழ். திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி இந்த பஸ் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இந்த பஸ்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ 5—ரி)

## வாசகர் திருமுகம்

### பட்டம் என்பது பகிடி அல்ல

மாணவன் ஒருவன் பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாவதற்கு என்ன விலை கொடுக்கிறான் என்பது அவனாலும் அவனுடைய பெற்றோராலும் மட்டுமே உணரக் கூடிய ஒன்று. அவன் பல்கலைக்கழக அனுமதியைப்பெற பட்ட பாட்டை விட பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு பட்டதாரியாக வெளியேறப்படும் பாடு சொல்லில் அடங்காது. இவ்வாறு அவன் பெறும் பட்டத்தை முறைப்படியான பட்டமளிப்பு நிகழும் வரை அவன் தனது பெயருடன் சேர்த்தலாகாது என்பது விதி.

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் கேவலமான ஒரு நிலைமை தலை தூக்கியுள்ளது. எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொள்ளாமல் தமது பெயருடன் பட்டங்களைச் சேர்த்து விளம்பரப்படுத்தும் கலாசாரம் வளர்ந்து வருகிறது. உண்மையிலேயே வருந்திக் கல்விகற்று பட்டதாரியான மாணவர்களைக் கொச்சைப்படுத்தும் இவ்வாறான நிலைமை நீண்ட கல்விப் பாரம்பரியமுடைய யாழ்ப்பாண மண்ணிலிருந்து முற்றாகக் களையப்பட வேண்டும்.

ஓர் உண்மையான பட்டதாரி.

### மக்களின் பிரயாணங்களும் அவர்கள் படும் இன்னல்களும்

எமது குடாநாட்டு மக்கள் தங்களின் தேவைகளுக்கு வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு இருக்கிற ஒரேயொரு பாதை கடல்வழிப்பாதை என்பதை யாவரும் அறிவர். அவர்கள் தங்களின் பிரயாண ஏற்பாடுகளைச் செய்வதானாலும் பல கருமங்களை பல இடர்களை எதிர்கொண்டு செய்யவேண்டியுள்ளது அவற்றில் முதலாவது விண்ணப்பப்பத்திரம் பெற வேண்டும், பின்பு அதை முறைப்படி நிரப்பி அதற்குரிய அலுவலரிடம் சென்று அவரின் அனுமதி பெறவேண்டும் பின்பு 'கிளியறன்ஸ்' (Clearance) பெறவேண்டும். அதன் பின்பு ரிக்கெட் பெறவேண்டும்.

இவைகளைச் செய்வதற்குஅவர்கள் பல நடைமுறைத்தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. விண்ணப்பப் பத்திரம் பெற அதற்குரிய இடத்துக்குச்சென்று வர ஒருநாள் வேண்டும், பின்பு அதை முறைப்படி நிரப்பிஅதற்குரிய அலுவலரிடம் சென்று அந்தக் கருமத்தை முடிப்பதற்கு இன்னொரு நாள்வேண்டும். அதன் பின் 'கிளியறன்ஸ்' பெறுவதற்கு பிறிதொரு நாள்வேண்டும். இவைகளை முடித்த பின் ரிக்கெட் பெறுவதற்கு வேறொரு நாள் தேவைப்படுகிறது. இவை எல்லாம் உடனே முடிகிறதா என்றால் அதுதான் இல்லை.

வெயிலிலும் மழையிலும் நனைந்து ஒதுங்குவதற்கு கூட இடமின்றி காலையில் இருந்து மாலை வரை இருப்பதற்குக்கூட இயலாத நிலையில் நிற்க வேண்டிய பரிதாப நிலைதான் எமது மக்களுக்கு ஏற்படுகிறது. இவற்றிற்கிடையில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக, இந்த அலுவல்களை எல்லாம் உடனே முடித்துத் தருகிறோம் என்று பசப்பு வார்த்தைகள் பல கூறி, அல்லல்படும் மக்களிடம் கையூட்டு வாங்கும் பெருச்சாளிகளிடமும் எமது அப்பாவி மக்கள் சிக்கிக் கொள்கின்றனர்.

தூர இடங்களில் இருந்து வருபவர்கள் முதல் நாள் இரவே சிவில் நிர்வாக அலுவலகம் இருக்கும் இடத்தை அண்டிய பகுதிகளில் வந்து தங்குகிறார்கள். தங்களது அலுவலைச் சுலபமாக முடித்துவிடலாம் என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அதுகூட உடனே முடிவதில்லை. காலை முதல் மாலை வரை இருந்துவிட்டுக் காரியம் கைகூடாத நிலையில் மக்கள் சலிப்படைந்து செல்வதை நாம் காண்கிறோம்.

இந்த அலுவலகங்களை எல்லாம் ஒரே இடத்தில் அமைத்தால் என்ன? யாழ்ப்பாணம் பழைய ரயில் நிலையம் இருக்கின்றது. அது பாரிய இடவசதி கொண்டது ஆனால் இடிந்த கட்டடம் தான் அதை ஓரளவு திருத்தி எல்லாக் கரும பீடங்களையும் அங்கே அமைத்தால் என்ன? இப்போது இந்த அலுவலகங்கள் உள்ள இடங்கள் எல்லாம் போக்குவரத்துக் கூடிய இடங்கள் ரயில் நிலையம் என்றால் சந்தடியற்ற இடம் தங்களுடைய கருமங்களை ஆற்ற வருபவர்கள் தங்களுடைய இயற்கை கடன்களைக் கூடக் கழிப்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். எனவே கொடியது, கொடியது அதிலும் தமிழனாகப்பிறந்தது கொடியது எமது மக்களுக்கு ஏன் இந்த அவல நிலை பட்ட கஷ்டங்கள், துயரங்கள் போதும் தங்களுடைய அவசரத் தேவைகளுக்காகத் தானே பயணம் மேற்கொள்கிறார்கள். உல்லாசப் பயணம் செய்வதற்கல்லவே இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?

பொது நன்மை விரும்பி.

# உதயன்

## பல்லவியும் அனுபல்லவிகளும்

நோர்வேயின் சமாதான முயற்சி பழைய கதை. நோர்வேக்காரர்கள் விரும்பியதைச் செய்யட்டும். அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைக் கடுமையாக முன்னெடுத்துச் செல்லும் — என்று கூறிய ரத்னசிறி விக்கிரமநாயக்காவே புதிய அரசாங்கத்தினது பிரதமராகவும் பதவி ஏற்றுள்ளார்.

முந்திய அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டம் கைவிடப்படும். பௌத்த குருமாரின் ஆலோசனையுடன் புதிய அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப்படும். அதுவே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவும் அமையும் — என்றும் கூறியவர் ரத்னசிறி.

அவரது இந்தக் கருத்துக்கள் எல்லாம் வெறும் தேர்தல் 'விளாசல்கள்' என்று எடுத்துக் கொள்ள முடியாது. உள்ளத்தில் உள்ளது தானே உதட்டில் வரும். அவரது அரசாங்கமே பதவிக்கு வந்திருப்பதால் போருக்கே முதலிடம் வழங்கப்படும்; சமாதான முயற்சிகள் பின்தள்ளப்படும் என்பதில் எப்படிச் சந்தேகம் உண்டாகும்?

ஆயினும், சர்வதேச சமூகத்தின் கண்ணில் முன்னரைப் போல மண்ணைத் தூவிக் கொண்டிருந்தால் மட்டுமே, உள்ளதை உலக நாடுகளிடம் இருந்து மறைத்தால் மட்டுமே, நிதிஉதவி, கடன், தொழில் நுட்ப உதவி, அது, இது என்று அவற்றிடம் இருந்து ''பசை'' களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முந்திய நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர், முன்னைய அரசாங்ககாலத்தில், அவசர அவசரமாக அதிகாரப்பரவல் அடங்கிய அரசமைப்பை— அரைவேக்காட்டுத் தீர்வு அடங்கிய அரசமைப்புச் சட்டத்தை — ஜனாதிபதி கொண்டு வந்தது ஏன்? அதனை நிறைவேற்ற முடியாமல் தோல்வி கிடைக்கும் என்று தெரிந்தும் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன?

அரசியல் தீர்வைக் கொண்டு வருவதில் தமக்குப் பெரும் கரிசனை உண்டென்று உலகத்துக்குக் காட்ட வேண்டிய தேவையும் அவசியமும் சந்திரிகாவுக்கு இருந்தது. அந்தத் தேவையும் அவசியமும் இப்போதும் உண்டு.

அதனாலேயே நோர்வே — இலங்கை அரசுகளின் ராஜீக உறவுப் பொன் விழாவில் கலந்து கொள்ளச் சென்ற வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் விஜயத்தை தக்கவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. மீண்டும் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஆதரவு என்ற பல்லவி மீட்டப்படுகிறது.

இதே சந்திரிகா தான்—

தேர்தலுக்குச்சிலதினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தை மீட்கும் வரை பேச்சுக்கு இடமில்லை என்று நோர்வேயிடம் விடுதலைப் புலிகள் கூறிவிட்டனர். அதனால் இனி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுவன்பதோ சமாதான முயற்சியில் ஈடுபடுவது என்பதோ இயலாத காரியம்— என்று கூறியிருந்தார்.

பிரதமர் ரத்னசிறி கூறியதெல்லாம் தவறான அபிப்பிராயங்களை உண்டாக்கி விட்டன என்பதனை உணர்ந்து அவை வெறும் ''தேர்தல் வேக''ப் பேச்சுக்கள் என்று பூசிமெழுகி—

சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு முயற்சி என்ற அனுபல்லவிகளை இசைக்கத் தொடங்குகிறார் சந்திரிகா — கதிர்காமரின் உரையாடும் திறமையைப் பயன்படுத்தி.

சமாதானப் பேச்சுக்களையும் அரசியல் தீர்வையும் விரும்பாதவர் யார்? இது விடயத்தில் இதய சுத்தி வேண்டும்.

# சாவகச்சேரி வைத்தியசாலை

# கட்டடங்கள் இடிந்த நிலையில்!

## அங்கு சென்று திரும்பிய வைத்திய அதிகாரி தகவல்

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக் கட்டடங்கள் யாவும் இடிந்து வீழ்ந்த நிலையில் காணப்படுகின்றன என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஞானசுதன் தலைமையில் நேற்று அங்குசென்ற ஆறு பேர் அடங்கிய குழுவினர் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:-

ஆஸ்பத்திரிப் பகுதியில் தாராளமாகச் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன் காரணமாக வெளிநோயாளர் பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடம், மகப்பேற்று வார்ட், டாக்டர்களின்விடுதி, சமையல் அறை ஆகியன சேதம் அடைந்து கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து கிடக்கின்றன.

வைத்தியசாலையில் கைவிடப்பட்ட மருந்து வகைகள் காணாமல் போயுள்ளன. அத்துடன் அங்கிருந்த உபகரணங்களும் மாயமாக மறைந்துவிட்டன.

ஆஸ்பத்திரியில் இருந்த பெரும்பாலான பொருள்கள் எரிந்த நிலையில் காணப்படுகின்றன; நிர்வாகக் கோவைகள் மழை வெள்ளத்தில் கிடந்தன.

ஆஸ்பத்திரிக்கு பின்பக்கமாக அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பலத்த சேதத்துக்குள்ளாகி இருக்கிறது. அங்கிருந்த குளிரூட்டிகள், இரும்பு அலுமாரிகள் ஆகியவற்றைக் காணவில்லை—

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ-3-117)

# பயங்கரவாத சட்டத்தின்கீழ் கைதான யாழ். பொறியியலாளர் விடுதலை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பராமரிப்பு பொறியியலாளர் நிக்கலஸ் செல்வநாயகம் வேலாயல்லா கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலி உறுப்பினர் அன்ரன் மாஸ்டர் என்றழைக்கப்படும் ஞானப்பிரகாசம் அன்ரனி தவச்செல்வம் என்பவர் பயங்கரவாத உறுப்பினராக இருந்து கொண்டு வன்செயலில் ஈடுபடுகிறார் என்பதைத் தெரிந்துகொண்டும் சந்தேகநபரான லோயல்லா அவரைப்பற்றி பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறினார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.வி. மகேந்திரன் சந்தேகநபர் அளித்த வாக்குமூலத்தில் அவர் எதுவித குற்றமும் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்ட அன்ரன் மாஸ்ரர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர் என்பது சந்தேகநபருக்குத் தெரியாது என்றும் வாதாடினார்.

இதனை விசாரணையின் பின்னரே தீர்மானிக்கமுடியும் எனத் தெரிவித்த நீதிபதி அன்ரூ சோமவன்ஸ விசாரணைக்கு உத்தரவிட்டார்

சட்டத்தரணி மகேந்திரன் தமது வாதங்களைச் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்ததை அடுத்து அதனை ஆராய்ந்த சட்டமா அதிபர் வழக்கை வாபஸ்பெறுவதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

அரசதரப்பில் அரச சட்டத்தரணி சேபால ரத்நாயக்க ஆஜரானார். (இ-4)

# கிளாலியிலிருந்து இடம்பெயர்ந்த மீனவர்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஒக். 19

கிளாலி மற்றும் புலோப்பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 96 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அவ்வப்பகுதி மீனவர் சங்கத் தலைவர்களினாலும் யாழ். மாவட்ட மீன்பிடி விரிவாக்க அலுவலகரினாலும் சிபார்சு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமப் பகுதியில் இருக்கும் குடும்பங்கள் யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதியில் இயங்கும் பிரதேச செயலர் அலுவலகத்திலும் —

வடமராட்சியில் இருக்கும் குடும்பங்கள் புலோலியில் இயங்கும் உப அலுவலகத்திலும் — பதிவுகளை விரைவில் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-5-ரி)

## முதியோர்தினவிழா

பளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலான முதியோர் தினவிழா இன்று காலை 10 மணிக்கு கரணவாய் கமக்காரர் மண்டபத்தில் நடைபெறும்

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூகநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் இரா. சுந்தரேசன் கலந்து கொள்வார். விழாவில் 108 முதியவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-3-ரி)

## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு புலோலியில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது

மேற்படி கலந்துரையாடலில் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி கேட்டுள்ளார். (இ-ரி)

## ரூ. 2 ஆயிரம் நிவாரணம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்த 10 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நாளை காலை 8.30 மணிக்கு யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக உள்ள தையல் பயிற்சி நிலையத்தில் வைத்து 2 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஜே/63, ஜே/67, ஜே/69, ஜே/71, ஜே/73, ஜே/78, ஜே/83, ஜே/84, ஜே/88 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த குடும்பத் தலைவர்கள் தேசிய அடையாள அட்டை, கி. அ. உறுதிப்படுத்தல் கடிதம், வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் இந்த நிவாரணம் பெறுவதற்கு குறிப்பிட்ட இடத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

## கப்பம் பெற்றவர் கைது

கொழும்பு, ஒக். 19

கொழும்பு மற்றும் புறநகர் பிரதேசங்களிலுள்ள வர்த்தகர்களிடமிருந்து கப்பம் பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரையும் அவரது சகாக்கள் இருவரையும் நுகேகொட பொலீஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். (இ-8)

## சமயசந்நிதியில்

அல்வாய் புதுக்குளம்கரைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம்நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை ரதோற்சவமும், மறுநாள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறுவதுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும்.

( இ — 173 )

## நாளை

ஐப்பசி 4

வெள்ளிக்கிழமை

திதி: அட்டமி

பின்னிரவு 1. 29 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம்

பிற்பகல்: 3. 05 வரை.

சுபநேரம்: 6.02— 7.32

ராகுகாலம்: 10.32—12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# இடம்பெயர்வில் பெற்றோரை பிரிந்தமூவர்மீண்டும் இணைகின்றனர்!

## செஞ், சர்வதேசக்குழுவின் உதவியுடன் நேற்று வன்னி பயணம்

யாழ்ப்பாணம், ஒக். 19

தென்மராட்சியில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்த போது பெற்றோரைத் தவறவிட்ட சகோதரர்களான மூன்று குழந்தைகள் ஆறுமாதத்தின் பின்னர் வன்னியில் உள்ள தமது பெற்றோருடன் இணையவிருக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகளால் நேற்றுப் பொறுப்பேற்கப்பட்ட இந்தக் குழந்தைகள் அந்த அமைப்பின் கப்பலில் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சகோதரர்களான சுப்பிரமணியம் தீபன் (வயது 11), சுப்பிரமணியம் துஷ்யந்தன் (வயது 9), சுப்பிரமணியம் தயாளன் (வயது 7) ஆகியோரே இந்த மூவரும் ஆவார்.

இடம் பெயர்வின் போது பெற்றோரைத் தவறவிட்டு உறவினருடன் இவர்கள் வடமராட்சியில் தங்கியிருந்தனர்.

இவர்களது பெற்றோர்கள் பிள்ளைகள் மூவரையும் தவறவிட்டு கிளிநொச்சி கோணாவளையில் தங்கியிருந்தனர்.

தமது பிளைகளைத் தவறவிட்டது குறித்து பெற்றோர்கள் மல்லாவியிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்து துன்னாலை ஞானசாரியார் பாடசாலையிலுள்ள நலன்புரி முகாமில் இந்த மூன்று சிறுவர்களும் பெரிய தாயாரின் குடும்பத்தினருடன் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இருபகுதியினருக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் தொடர்பு ஏற்பட்டதை அடுத்து மேற்படி குழந்தைகள் வன்னியிலுள்ள அவர்களது பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-5)

## உதய வாக்கு

சட்டம் ஓர் இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அது ஏழைக்கு எட்டாத விளக்கு.

— அண்ணா

# வன்னி வாக்காளர்களுக்கு ரெலோ நன்றி தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 19

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அரசினதும், அரசு சார்பான சகல கட்சிகளினதும், ஜனநாயக விரோத செல்வாக்கின் மத்தியில் வன்னி மாவட்ட மக்கள் எமது கட்சிக்கு அளித்த அசைக்க முடியாத ஆதரவை இருகரம் கூப்பி நன்றியுடன் வரவேற்கின்றோம்.

மேற்கண்டவாறு ரெலோ அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமக்கெதிராகப்பணபலம், அரசாங்கபலம், அதிகாரதுஷ்பிரயோகம், காடைத்தனம் ஆகியன கட்டவிழ்த்து விடப்பட்டும் ஆயிரக்கணக்கான வாக்குகளை எமக்கு அளித்த யாழ். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்ட மக்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் தமது தேசிய உரிமைகளுக்கான போராட்டத்தின் புதிய பலத்தைஎமக்கு ஆதரவு தந்து ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்துள்ளனர். தமிழீழவிடுதலை இயக்கத்தின் நிலையை உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உடலில் உண்மையான சிங்கள இரத்தம் ஓடினால் தமிழரினதும் முஸ்லிம்களினதும் பின்னால் ஓடுவார்களா?

## பொ.ஐ. முன்னணியையும் ஐ.தே.கவையும் சாடுகிறது சிஹல உறுமய

கொழும்பு,ஒக்.19

இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டுமே ஆட்சி அமைப்பதற்காக முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் பின்னால் ஓடித் திரிகின்றன. இவர்களது உடலில் உண்மையான சிங்கள இரத்தம் ஓடினால் இப்படி ஓடித் திரிவார்களா?

சிஹல உறுமயவின் பொதுச் செயலாளரும் தேசியப் பட்டியல் மூலம் நியமன எம்.பியாகத் தெரிவாகி இருப்பவருமான திலக கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டியில் உள்ள சிஹல உறுமயவின் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் திலக் கருணாரத்ன மேலும் கூறியதாவது -

கிறிஸ்தவர் என்பதற்காக நாங்கள் சிஹல உறுமயவின் தலைவர் எஸ்.எல்.குணசேகராவை கட்சியில் இருந்து நீக்கவில்லை. இது சில பத்திரிகைகள் கட்டிவிட்ட அபத்தமாகும். அவா மீண்டும் எம்முடன் வந்து சேர்ந்தால அவரை நேசக்கரம் நீட்டி அரவணைத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றோம்.

மத்திய கமிட்டி கூட்டம் நடைபெறும் போது எதையுமே கூறாமல் தமது சகாக்கள் அறுவருடன் குணசேகரா கூட்டத்தை விட்டு வெளிநடப்பு செய்தார். எதற்காக அவா அவ்வாறு செய்தார் என்பது எனக்குத் தெரியாது. இராஜிநாமாக் கடிதத்தைக் கூட இதுவரை எனக்கு அவர் அனுப்பி வைக்கவில்லை. யார் விலகிச் சென்றாலும் சிஹல உறுமய கட்சியை இனி எவராலும் அழித்து ஒழித்துவிட முடியாது. அக்கட்சி இப்போது வளர்ந்தோங்கி வருகிறது. அதனை முழுச் சிங்கள மக்களும் வளர்த்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

நாங்கள் சகல மதங்களையும் மதித்து, கௌரவித்து செயற்படுகின்றோம். சிங்கள மக்கள் இழந்து போன தமது உரிமைகளை மீட்டெடுப்பதே எமது இலட்சியம். இன்று சிறுபான்மை இனத்தவர்கள் பெற்றுக் கொண்டுள்ள உரிமைகள் அளவுக்கு அதிகம். ஆனால் சொந்த மண்ணில் சிங்களவர் இழந்த உரிமைகளை அவர்கள் மீண்டும் பெற்றுக் கொள்ளவில்லை. அதனைப் பெற்றுக் கொடுக்கவே நாம் பாடுபடுகின்றோம்.

இத்தேர்தலில் நாம் ஓர் ஆசனத்தைக் கூட கைப்பற்றாது போனாலும் நகர்ப்புறங்களில் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றதால் எமக்குத் தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்று கிடைத்துள்ளது. இது சிஹல உறுமய கட்சியின் பெரும் வெற்றியாகும். நகர்ப்புறங்களில் சிஹல உறுமய பிரபல்யம் அடைந்த அளவுக்கு கிராமப்புறங்களில் பிரபல்யம் அடையவில்லை. இனி அதனை நாம் கிராமப் புறங்களுக்கும் தீவிரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

நாங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒருவராக சுழற்சி முறையில் நாடாளுமன்றத்தில் பதவி வகித்து சிங்கள மக்களின் நல் வாழ்வுக்காகப் பாடுபடுவோம். சிறுபான்மையினரின் நலனை உத்தேசித்து புதிய அரசமைப்பை மீண்டும் நாடாளுமன்றத்தில் முன் வைத்தால் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம். அதைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு 10 அல்லது 30 நிமிடங்கள் கிடைத்தாலும் அது போதாது. வெளியில் பௌத்த பிக்குகளையும், பௌத்த மக்களையும் ஒன்று திரட்டி பெரும் போராட்டம் நடத்தினால் தான் அதில் வெற்றி பெற முடியும் - என்றார்.

(இ-4)

## புலிகளின் தரப்பில் உயிரிழந்த ஐவர்

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 5பேரின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் தமது "புலிகளின் குரல்" வானொலி மூலம் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

கடந்த 15 ஆம் திகதி புளியங்குளம் மற்றும் மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் போது முறையே 2ஆம் லெப். மாறன் (இரட்ணராஜா செல்வகுமார் - துணுக்காய்), வாசுகி (கதிரவேலு பிறேமினி - கிளிநொச்சி), சிறப்பு எல்லைப் படையைச் சேர்ந்த சிறில் அமலநேசன் (இரணைதீவு) ஆகியோரும் -

நாகர்கோவிலில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற மோதலில் எல்லைப் படையைச் சேர்ந்த பொன்னையா இராசேந்திரம் (விஸ்வமடு) என்பவரும் -

திங்கட்கிழமை மணலாறுப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது கப்டன ஜெயபாஸ்கரன என்பவரும்-

உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

03-10-2000 அன்று உடுப்புகள் அடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கிறிஸ்ரி இராசநாயகம், 18 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (79593)

### தவறிவிட்டது

பரராஜசிங்கம் ஆறுமுகதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.35191940v) கடந்த 14.10.2000 அன்று பருத்தித்துறை துறைமுகப்பகுதிக்குச செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆறுமுகதாசன் மே/பா ரி. பசுபதி, துரையன்வளவு, புலோலி வடக்கு,பருத்தித்துறை என்னுமமுகவரியில்ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (79586)

ஐயாத்துரை மெய்யழகன் என்பவரது தேசிய அடையாள அட்டை (482233872v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 119A., பருத்தித்துறை வீதி, நல்லூர் (இந்து விடுதிக்கு அண்மையில்) என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (79605)

தவத்தரசா தவசிரோஷன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.812843559v), விசேட அடையாள அட்டை (இல.091046901) என்பன வல்லைவெளிக்கும், நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடியிலுள்ள வதனா ஜுவல்லறியில் அல்லது நெல்லைக்குமரன் எனும் கடையில் ஒப்படைத்து உதவவும். (79591)

நாகலிங்கம் மதிவதனா என்பவருடைய தே.அ.அ. (இல.727150641v) விசேட அ. அட்டை (இல.0907024539) என்பன யாழ்ப்பாணம புடைவைக் கடைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் நியூலலிதாஸ் நகைமாடத்திலோ அல்லது சுன்னாகம் டிலக்ஸ் எலெக்றிக்கல்ஸ் எனும் கடையிலோ ஒப்படைத்து உதவவும். (79609)

மார்க்கண்டு ரவிரதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 803180461v), விசேட அடையாள அட்டை, பிரிகேட் பாஸ் என்பன அல்வாய்க்கும் 1 ஆம கட்டைக்கும இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் ஒப்படைக்கவும். (79614)

உரும்பிராய் சிவகுல வீதியைச் சேர்ந்த நவரத்தினம் பிறேமகுமார் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0903023484) கடந்த 16-10-2000 அன்று உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (C/13446)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும். ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்கம் சுவாமிகள்வீதி. சங்கானை. (79579)

### விற்பனைக்கு

வாடகைக்கு விடும் 200பைப் கதிரைகள் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு. இலக்கம் 101/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (79604)

நல்ல நிலையிலுள்ள (புதிய) YAMAHA (100v) என்ஜின் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.சதானந்தன் 5/1, புனகயிரதவீதி. நீராவிபடி, யாழ்ப்பாணம். (79610)


### கப்பலில் தபால்கள்

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 89 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 79 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொழும்பில் உள்ள பார்சல்கள் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட காரணத்தினால் இந்தத் தடவையும் குறைந்த எண்ணிக்கையிலான பொதிகளே எடுத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இரி-10)


## VACANCY FOR ACCOUNTS CLERK

**Calling for Applications from suitably Qualified persons for the above Vacancy.**

*Please apply before 23 rd October 2000.*

To:

**Assistant Project Co-Ordinator,**
**FORUT,**
**Athiyady, Point Pedro.**

(79603)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வன்

**சௌரிபாலக் குருக்கள் சுப்பிரபாதசர்மா**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய 180 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நெல்லியடி அடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினர்.

(79581)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரபல பொருளியல் ஆசிரியர்

**வே.கருணாகரன்-சயந்தி தம்பதியரின்**

செல்வப்புதல்வி

**அனிதா - 168 புள்ளிகள்**

*(சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)*

இவருக்கு பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் பரிபூரண ஆசீர்வாதம் நிரம்பிய அருள் மேலும் கிடைக்கப் பெற்று வாழ்க்கையில் சகல வளங்களும் கிட்ட வேண்டுமென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பகவான் மருந்தகம்

*221, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(79607)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசையா நல்லையா

மலர்வு 1948-07-16 | உதிர்வு 1999-10-30

திதி: வைத்தி 19-10-2000

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய் மறைந்து
ஆண்டுகள் ஒன்று ஆனதே அப்பா!
உங்கள் பாசமும் பண்பும் பரிவும்
எம் நெஞ்சை விட்டு அகலாது.

**- மனைவி, பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:
*பாடசாலை வீதி.*
*நாவற்குழி.*
*கைதடி.*

தற்காலிக முகவரி:
*க.சிவனேஸ்வரன் (சிவா)*
*கோப்பாய் தெற்கு,*
*கட்டப்பிராய்.* (79575)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 23 - 05 - 1927



மறைவு 19 - 09 - 2000

### அமரர் மாணிக்கம் சேனாதிராசா

பொங்கிடும் இவ்வுலகில்
நின்றிடும் உம் உணர்வுகள்
பொங்கிடும் எம் நினைவுகளில்
உம் நினைவுகள்
பொங்கிட உம் வாழ்வு இவ்வுலகன்றி
விண்ணுலகில் பொங்கிடவே
பொங்குதே எம் உணர்வுகள் மீளா பிறவி பெற
வாழ்த்துகின்றோம் இவ்வுலகில்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இன்று (19-10-2000) வியாழக்கிழமை எமது தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
சகோதரன்: குமாரசாமி குடும்பம

*"கந்தன் கோட்டம்"*
*சித்தன்கேணி.*

(79595)

# மேற்குக்கரை மோதல்களைத் தடுக்க

# பராக்-அரபாத் இடையே உடன்பாடு;

# ஆனாலும் நிலைமை மாறவில்லை!

## நேற்றைய சம்பவங்களில் 3 பலஸ்தீனர்கள் பலி!

காஸா, ஒக்ரோபர் 19

எகிப்தில் நடைபெற்ற இஸ்ரேல் – பலஸ்தீனம் இடையேயான பேச்சுக்களில் உடன்பாடு எட்டப்பட்ட போதும் மேற்குக் கரை மற்றும் காஸாவில் இருதரப்பினரிடையேயான மோதல்கள் தொடர்கின்றன. அங்கு நேற்றையதினம் இடம்பெற்ற வன்முறைகளில் 3 பேர் பலியாகியுள்ளனர்.

இஸ்ரேலின் கண்காணிப்பில் உள்ள மேற்குக் கரைப் பகுதிகளில் இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடந்த 3 வாரகாலமாக நடைபெற்று வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக எகிப்திய ஓய்வு ஸ்தலமான ஷரம் அல் ஷேக்கில் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் மற்றும் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் இடையே, அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில் நேற்று முன்தினம் உடன்பாடு எட்டப்பட்டது.

உடன்பாடு ஏற்பட்ட சில மணி நேரங்களில் அதனைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளாக மோதல்களால் மூடப்பட்டிருந்த காஸை விமான நிலையத்தை மீண்டும் திறக்கும்படி பராக்கும், இஸ்ரேலிய இராணுவத்தினர் மீதான தாக்குதல்களை பலஸ்தீனர்கள் உடனே நிறுத்த வேண்டும் என்று அரபாத்தும் உத்தரவிட்டனர்.

ஆனாலும் தலைவர்களிடையேயான உடன்பாடு மேற்காசியாவில் எந்த வித மாறுதல்களையும் ஏற்படுத்தவில்லை என்றும்—

தொடர்ந்து நடந்து வரும் மோதல் சம்பவங்களில் நேற்றையதினம் 3 பேர் உயிரிழந்ததாகவும் —

அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குக் கரையில் முன்பிருந்த அமைதி நிலையை ஏற்படுத்தவும் —

சட்டம், ஒழுங்கை மீட்கவும் இருதரப்புத் தலைவர்களும் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிடும்படி அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

உதய அரங்கில்

## ஆந்திராவில் புயல் அபாயம்!

ஹைதராபாத், ஒக். 19

இந்தியாவின் ஆந்திர மாநிலக்கரையிலிருந்து 375 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த மண்டலம் மணிக்கு 90 முதல் 100 கிலோ மீற்றர் வேகத்தில் புயலாக ஆந்திராவின் நெல்லூர்ப் பகுதியை இன்று தாக்கக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## ராஜ்குமாரை விடுவித்ததும் வீரப்பன் வன்னி செல்வாராம்

### 'இந்து' பத்திரிகை கூறுகிறது

பெங்களூர், ஒக். 19

கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுதலை செய்த பின்னர் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் இலங்கையில் உள்ள வன்னிக்காட்டுக்குச் சென்றுவிட முடிவு செய்திருப்பதாக 'இந்து' பத்திரிகை தனது பெங்களூர்ப் பதிப்பில் செய்தி வெளியிட்டுள்ளது.



வீரப்பனின் முடிவு தொடர்பாக கர்நாடக உள்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கேயிடம் தமது செய்தியாளர் கேட்டபோது ''ராஜ்குமாரைவிடுவித்த பின்னர்வீரப்பன்எங்காவது செல்லட்டும்'' என்று அவர் கூறியதாகவும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழ் நாட்டின் சென்னையில் தலைமையகத்தை கொண்டுள்ள 'இந்து' பத்திரிகை தமிழ் மற்றும் தமிழருக்கு விரோதமான போக்கைக் கொண்டிருப்பதாக தமிழர் அமைப்புகள் இந்தச் செய்தி குறித்துக்கருத்துத் தெரிவித்துள்ளன.

(ஒ-4)

## செல்வந்த நாடுகள் குறித்து ஐ.நாவில் இந்தியா முறைப்பாடு!

நியூயோர்க், ஒக். 19

வறிய நாடுகளுக்கு முன்னேறிய செல்வந்த நாடுகள் உதவுவதில்லை என்று இந்தியா ஐ நாவில் முறையிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும். ஐ.நா.வின் குழுக்கூட்டத்தில் இந்தியா சார்பில் கலந்து கொண்டுள்ளவர்களில் ஒருவரான சங்தர் இந்த முறையீட்டை சபையின் முன் வைத்து உரையாற்றினார்.

கடந்த 10 ஆண்டுகளாகக் கடன் சுமைகள் மற்றும் வறுமையின் பிடியிலிருந்து தாமாகவே தான் வளரும் நாடுகள் மீண்டு வருவதாகவும் —

பசிக்கொடுமை, நோய்கள், கல்வி அறிவின்மை ஆகியவற்றிலிருந்து எதிர்காலச் சந்ததியினரை விடுவிப்பதில் கணிசமான மேம்பாடு காண வேண்டும் என்றும் —

சங்தர் ஐ நா. குழுக்கூட்டத்தில் நிகழ்த்திய உரையில் மேலும் தெரிவித்தார். (ஒ-8)

### அரசுக்கெதிரான பேரணியின் போது

## விவசாயிகளை நிர்வாணமாக்கிய தமிழகப் பொலீஸார் மீது வழக்கு!

சென்னை, ஒக். 19

தமிழக அரசுக்கு எதிராக பேரணி நடத்திய விவசாயிகளைத் தாக்கி நிர்வாணப்படுத்தி ஊர்வலமாகக் கொண்டு சென்ற பொலீஸார் மீது நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பச்சைத் தேயிலையின் விலையை அரசு குறைத்ததை எதிர்த்து நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் சமீபத்தில் நீக்கரி என்ற இடத்திலிருந்து அரசு தேயிலைச் சபை அலுவலகம் இயங்கி வந்த காத்தாடிமடம் வரை ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினார்கள்.

இந்தப் போராட்டத்தின் போது, பேரணியை வழிமறித்த பொலீஸார் பேரணியில் கலந்து கொண்டவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தியதாகவும் —

போராட்டத்தை முன்னின்று ஏற்பாடு செய்தவர்களை நிர்வாணமாக்கி வீதியில் ஊர்வலமாகக் கொண்டு சென்றதாகவும் —

பொலீஸார் மீது குற்றஞ்சாட்டி சென்னை உயர் நீதிமன்றத்தில் தேயிலை விவசாயிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் பொலீஸாரின் மனிதாபிமானமற்ற செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரும்படி கோரியுள்ளனர்.

விவசாயிகளின் போராட்டப் பேரணி மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து மத்திய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்த வேண்டும் என்றுகோரப்பட்ட மனு மீதானவழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## சிம்பாப்வேயில் ஆர்ப்பாட்டம்

ஹராரேய், ஒக். 19

உணவுப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து சிம்பாப்வேயில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் கிளர்ந்தெழுந்த பொது மக்களால் நடத்தப்படுவதாகவும் ஆனால் அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களை கைது செய்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.


## தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பில் போடுவதற்கும், போட்டோக் கொப்பி இயந்திரம் இயக்குவதற்கும் ஆண் ஒருவர் தேவை.

அத்துடன் காரியாலய உதவியாளராகப் பணி புரிவதற்கு சிறுவன் ஒருவரும் தேவை.

விரும்புபவர்கள் சுய விவரத்தை சொந்தக் கையெழுத்தில் எழுதி 31—10—2000இக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மே/பா உதயன், இல. 1118, யாழ்ப்பாணம்.

(79606)

## இறுதிச் சந்தர்ப்பம்

தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் பெற்று வேலையற்றிருப்போர்

இதுவரை தமது பெயர்களைப் பதியாதவர்கள் 22 - 10 - 2000 பகல் 11.30 இற்கு நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி என்னும் முகவரியில் சான்றிதழ் பிரதியுடன் சமுகமளிக்கவும். இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும்.

(79567) கு. பாலகுமாரன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி

நீர்வேலி.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை - 2000

1. கே. தயாளன் – 151
2. கோ. சத்தியப்பிரியா – 142
3. ஜே. லக்சன் – 137
4. வி. அனுதரன் – 136

சித்தியடைந்த மேற்படி மாணவர்களையும் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
(79612) பழைய மாணவர் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மருதங்கேணி

இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000

செல்வி நடராசா றம்சியா 141 புள்ளிகள்

செல்வி தங்கமயில் யாழினி 139 புள்ளிகள்

மேற்படி மாணவர்களையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களைக் கற்பித்து ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/13451)

யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

## தரம் 6 அனுமதி - 2001

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை யா/சன்மார்க்க வித்தியாலயத்திலும், யா/நல்லூர்இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 01 - 11 - 2000

– அதிபர்

(சி/ 13448)



மிலேனியம் ஆண்டின் வாழ்த்திடும் நெஞ்சங்கள்

தீபாவளி வாழ்த்து மடல்களைத் தெரிவு செய்திட

## பேப்பர் ஹவுஸ்

அன்பு, பாசம், நேசம், தெய்வீகம்
அத்தனையையும் நீங்கள் தெரிவு செய்யும்
வாழ்த்து மடல்களில்
நவீன கட்டிங் அமைப்புகளில்

**மிலேனியம் வாழ்த்து மடல்கள்**

வந்து இறங்கி விட்டன. வாழ்த்துவோர் தெரிவு செய்து தேர்ந்தெடுக்க......

வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

**பேப்பர் ஹவுஸ்,**

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 2783 (சி/13449)


## கண்ணீர் அஞ்சலி

எமது கால்நடை வைத்தியரான இ. ஞானசேகர் அவர்களின் தந்தையான

### மயில்வாகனம் - இராஜசேகரம்

அவர்கள் 17 - 10 - 2000 இல் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளரும், ஊழியர்களும்,**
**பிராந்திய கோழிப் பண்ணை,**
அச்சுவேலி.

(79611)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 | 23 |
| — | — |
| 07 | 10 |
| — | — |
| 1935 | 1997 |

### அமரர் நாகமணி இரத்தினவேல்

[F. C. M. A. (U. K.), F. P. F. A., Dip in P. F. M., Dip in Accy, S. L. Ac S - I]

(முன்னாள் சிரேஷ்ட கணக்காளர் — கடற்றொழில் நீரியல்வள அமைச்சு, பிரதம கணக்காளர் — பொலிஸ் திணைக்களம், உதவி நிதியாளர் — விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

***திதி: 19–10–2000***

அன்பு அப்பாவே,

1995 இடப்பெயர்வின் போது எங்கள் உயிர் காக்க வன்னி அழைத்துச் சென்றீர்கள்!

இந்த இடப்பெயர்வின் போது... .....,

உங்கள் ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் பாதமதில் நித்திய பேரின்பப் பெருவாழ்வு பெற நல்லூர் முருகனை இறைஞ்சுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி,**
**பிள்ளைகள்: செந்தூரன், செவ்வந்தி.**

126A, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.

(79571)

## விளையாட்டு விழா

நெல்லியடி, ஒக். 19

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அனுசரணையுடன் ஆனைக்கோட்டைப் பகுதியில் நடத்தப்பட்டுவரும் ஆதவன் முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு நடைபெறும்.

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ. சின்னத்துரை தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில், கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகமும் யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் ந. சிவராஜாவும் கலந்து கொள்வர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களான க. ஸ்ரீபதி, வை சந்திரராஜ், கூட்டுறவுப் பரிசோதகர் வி.கே. அருந்தவநாதன் உட்பட இன்னும் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(இ-109)

## நாவல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 19

செங்கை ஆழியானின் ''மரணங்கள் மலிந்த பூமி'' நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். யாழ். இலக்கிய வட்டத் துணைத் தலைவர் மூதறிஞர் தி. ச. வரதராசன் (வரதர்) விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் கலாபூஷணம் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார். யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை ஆற்றுவார்.

ஓய்வு பெற்ற பிரதி அதிபர் க. சிவராமலிங்கம் முதல் பிரதியைப் பெற்று வாழ்த்துரை வழங்குவார்.

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், சிற்பி சிவ சரவணபவன், செம்பியன் செல்வன் ஆகியோர் மதிப்புரை நிகழ்த்துவார்கள். (அ–109)

## பொன்னாடை போர்த்து கௌரவிப்பு

நெல்லியடி, ஒக். 19

கரவெட்டி உச்சில் புவனேஸ்வரி அம்மன் கோயில் முன்றிலில் நடைபெற்ற காத்தவராயன் சிந்துநடைக் கூத்தை நெறிப்படுத்திய கரவெட்டி கே. எஸ். சின்னத்தம்பிக்கு ''கலைவேந்தன்'' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. பொன்னாடை போர்த்து அவர் கௌரவிக்கப்பட்டார்.

இந்த வைபவம் கடந்த முதலாம் திகதி ஆலய முன்றிலில் மேற்படி ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ தி. கனகசபேஸ் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் சமாதான நீதிவான் க. தருமலிங்கம் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார். உச்சில் புவனேஸ்வரி அம்மன் கோயில் பரிபாலன சபைச்செயலாளர் க. குமாரசாமி, சங்கோடை முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. தியாகராசா உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியில் கே. எஸ். சின்னத்தம்பிக்கு சமாதான நீதிவான் க. தருமலிங்கத்தினால் ''கலைவேந்தன்'' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்து அவர் கௌரவிக்கப்பட்டார். (இ–109


வட. இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

## தரம் 6 அனுமதி - 2001

மேற்படி வகுப்புக்கு இம்மாதம் முதல் 30-11-2000 வரை அனுமதி கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

– அதிபர்.

(சி/13450)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★★★

யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000

செல்வன்

### யோகநாதன் துஷ்யந்தன்

141 புள்ளிகள்

மேற்படி மாணவனையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய மாணவர்களையும் அவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/13452)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

யா/மல்லாகம்
விசாலாட்சி வித்தியாசாலை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000

சித்தி பெற்ற மாணவர்கள்

செ. தர்சிகா – 152 த. கிரிதரன் – 137
ஜெ. றேஜி – 137

வெட்டுப் புள்ளிக்கு அண்மித்தோர்

ந. சுகன்யா ஆ. அனுஷா அ. சாதனா
கா. பவதர்சிகா இ கவிதா

இம்மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் ஊக்கத்துடன் அயராது உழைத்த ஆசிரியர்கள்

**திருமதி சு. இராஜேந்திரன்**
**செல்வி சோ. பாலகௌரி**

அவர்களையும் சகல ஒத்துழைப்புக்களையும் நல்கிய அதிபர் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(79617) – பெற்றோர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 21 |
| — | — |
| 07 | 09 |
| — | — |
| 1919 | 2000 |

### அமரர் ஆழ்வாப்பிள்ளை ஏரம்பு

(ஓய்வுபெற்ற புள்ளி விவர உத்தியோகஸ்தர்)

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் ஆழ்வாப்பிள்ளை ஏரம்பு அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை [20-10-2000] வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் புற்றளையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், இதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இகிரி வளவு,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(79615)

## யாழ்.நீதிமன்றுக்கு கட்டு நிதி கிடைத்தது

சந்தேக நபர்களினால் செலுத்தப்பட்ட பிணை வைப்புக்களை மீளளிப்புச் செய்வதற்காக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு நீதியமைச்சுச் செயலாளரினால் கட்டுநிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிணைப்பணம் செலுத்தியவர்களில் பலர் தமது பணத்தை மீளப் பெற்றுள்ளதுடன் சிலர் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கீழ்வரும் பெயர்களையுடையவர்களை நீதிமன்ற வேலை நாள்களில் வந்து தமக்குரிய காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். நீதிமன்றம் பதிவாளர் செல்வி கந்தசாமி மீரா கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர்களின் விவரம் வருமாறு:- சபாரத்தினம் இராஜேஸ்வரன் (கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை), கணபதிப்பிள்ளை இராசலிங்கம் (தோப்புக் கொலனி, அச்சுவேலி மேற்கு), செலவராசா ராணி(புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்), தனேஸ்வரன் ஆனந்தி (அம்மன் றோட், கந்தர்மடம்).

# சாவகச்சேரி இளைஞன் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருட காலமாக களுத்துறைச் சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சாவகச்சேரி இளைஞர் ஒருவர் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தவேந்திரராசா (வயது 36) என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் ஆவார்.

தொடர்ந்து ஒரு வருடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த காரணததாலும் குடும்பத்தினை பராமரிக்கும் ஒருவர் என்பதனை கருத்தில் கொண்டும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் இவரை விடுவிப்பதாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சு.சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

யாழ். நீதிமன்ற அலுவலகத்தில் இரண்டு கிழமைக்கு ஒரு தடவை வரும் வெள்ளிக்கிழமைகளில் காலை ஒன்பது மணிக்கும் 3 மணிக்கும் இடையில் இவர் கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துச் சிறைச் சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்த இளைஞர் நேற்று யாழ்.நீதி மன்றில் வைத்து அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார். (இ-5-9)

## தேர்தல் வன்முறைகள் நீடிப்பு

கொழும்பு,ஒக்.19

தேர்தலுக்கு மறுதினம்முதல் நேற்று வரை 114 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலீஸ் தேர்தல் செயலகம் தெரிவித்தது.

இவற்றில் ஐ.தே.கட்சியால் 55 முறைப்பாடுகளும், பொ.ஐ.முன்னணியால் 37 முறைப்பாடுகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் 4 முறைப்பாடுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-8)

## ஓட்டோவில் வெடி மருந்து

கொழும்பு,ஒக்.19

ஓட்டோ ஒன்றில் வெடிமருந்துகள் கொண்டுசென்றனர் என்று கூறப்படும் மூவரை குருநாகல் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

குருநாகல், மல்கடுவாவ பகுதியில் பொலீஸ் சோதனை நிலையம் ஒன்றில் வைத்து பிரஸ்தாப நபர்களை கைதுசெய்ததாகவும் அவர்கள் கொண்டுசென்ற 90 கிராம் வெடிமருந்துகளையும் பொலீஸார் கைப்பற்றியதாகவும் - குருநாகல் பிரதேச பொலீஸ் அத்தியட்சகர் ரவி விஜயகுணவர்த்தன தெரிவித்தார். (இ-8)

## ஹெலி விபத்து அறிக்கை விரைவில்

கொழும்பு,ஒக்.19

அண்மையில் அரநாயக்க பகுதியில் அமைச்சர் அஷ்ரப் உட்பட பதினான்கு பேரின் உயிர்களைக் காவு கொண்ட ஹெலி விபத்துக் குறித்துத் தமது விசாரணை அறிக்கையை அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. விரைவில் சமர்ப்பிக்க உள்ளது.

இவ்வாறு இராணுவ ஊடகத்துறைப் பேச்சாளர் சரத் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பும், வெடிபொருள்கள் தொடர்பான நிபுணர்கள் இருவரும் அண்மையில் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு நேரில் சென்று தமது ஆய்வுகளை மேற்கொண்டனர்.

விபத்துக் குறித்த சகல ஆய்வுகளையும் முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள அவர்கள் இன்னும் ஓரிரு வாரங்களில் தமது விசாரணைகள் குறித்த பூரண அறிக்கையை சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-8)



அண்மையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் இலக்கிய நண்பர்களினால் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவின் போது பிரபல ஓவியர் ரமணியை எழுத்தாளர் தெணியான் விருது வழங்கிக் கௌரவிக்கின்றார். கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அருகே காணப்படுகின்றார்.

# 9 இளைஞர்களை விடுவிக்க சட்டமா அதிபர் அறிவுறுத்து

பயங்கரவாத தடைச்சட்டததின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படாத ஒன்பது இளைஞர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபரினால் யாழ்.நீதிமன்றுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:- இரத்தினசிங்கம் விக்கினேஸ்வரன், முத்துலிங்கம் ஜெயகாந்தன், ஜோசெப் அமலதாஸ், தேவதாஸ் றெஜினோல்ட் றெஜி, தேவதாஸ் இமானுவல், தேவதாஸ் றொபின்சன், சிறில் ஷெல்ரன் நிரோஷ், குணரட்ணம் குணசீலன், இரத்தினசிங்கம் மணிவண்ணன். (இ-5)

## உரும்பிராயில் கிரனேட் வெடிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

நேற்றுப்பகல் 11.30 மணியளவில் உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவரும் காயம் அடையவில்லை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

அபயரெட்னா ~ சுகந்தி தம்பதிகளின் அன்புச்செல்வன்

**செல்வன் அ.டினேஷ் – 161 புள்ளிகள்**

பெற்றமைக்காக அவரை வாழ்த்துவதுடன் அவரின் வழிகாட்டியாக விளங்கிய யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், வகுப்பாசிரியை செல்வி குணரஞ்சினி அவர்களுக்கும் மற்றும் தனிப்பட்ட முறையில் கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

டடி, அம்மா,
தங்கை - சுலஷ்ஷா,
அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா,
சித்தப்பாமார், அன்ரிமார்,
அண்ணாமார், அக்காமார், மாமா,
மாமி, அத்தான்.

*167, இராமலிங்கம்வீதி,*
*முடமாவடி.*

(79619)


# மலிவு விற்பனை!

## தீபாவளி மலிவு விற்பனை!!

# 'மகாசில்க்ஸ்'

புடைவை ஸ்தாபனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை!!!

ஆடையுலகில் காலடி எடுத்துவைத்து குறுகிய காலத்தில் ஏராளமான வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே ஈர்த்துக்கொண்டுள்ள மகாசில்க்ஸ் புடைவை ஸ்தாபனம் வருகின்ற தீபாவளியை முன்னிட்டு, வாடிக்கையாளர் நலன்கருதி அனைத்து ஆடைவகைகளையும், அசத்தியான மலிவு விலையில் விசேட கழிவுடன் விற்பனைக்கு விட்டுள்ளது.

முந்துங்கள்! முந்துங்கள்!! உங்கள் மனம் நாடும் அனைத்து ரக தெரிவுகளுக்கும்!!!

# 'மகா சில்க்ஸ்'

புடைவை ஸ்தாபனம்
32, 40A, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/13455)



# தேசிய சேமிப்பு வங்கி

**18/10/2000 இலிருந்து நிலையான வைப்புகளுக்குரிய *அதிகரிக்கப்பட்ட* புதிய வட்டி வீதங்கள்.**

| | |
|---|---|
| 12 மாத வைப்பு - வருட வட்டி | - 13% |
| 12 மாத வைப்பு - மாதவட்டி | - 12% |
| 06 மாத வைப்பு | - 12% |
| அழைப்பு வைப்பு (3 மாதங்கள்) (CALL DEPOSIT) | - 12.5% |

NSB

உங்கள் குடும்ப வங்கி
YOUR FAMILY BANK

(C/13454)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
15
-
02
-
1963



மறைவு
19
-
09
-
2000

## அமரர் சிவசம்பு தவராசா

அன்பின் உறைவிடமே ஆசை மருமகனே!
உன்னை ஒன்றரை வயதினிலே வளர்த்த உன்
பேர்த்தியின் பொக்கிசமே அணையாத சோதியே
உன்னருமை மனைவி பிள்ளையைத் தவிக்க
விட்டு எங்கே சென்றாய்? பதினைந்து ஆண்டுகள்
உன் திருமுகத்தினைக் காணாது தவிக்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.10.2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி கிரியைகளில் பங்குகொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

சி.திருநாவுக்கரசு குடும்பத்தினர்
(மாமன்)

*சில்லாலை தெற்கு,*
*பண்டத்தரிப்பு.*

(79629)

# மரண அறிவித்தல்

## கந்தையா நாகேந்திரம் (சற்குணம்)

அரியாலையைச் சேர்ந்த சற்குணம் என அன்பாக அழைக்கப்படும் கந்தையா நாகேந்திரம் (முன்னாள் BOAT MECHANIC - குருநகர்) அவர்கள் சுவீடனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வரட்ணம், அம்பிகா ஆகியோரின் அன்பு மருமகனும் ஜானகியின்(முன்னாள் ஆசிரியை - ஆங்கில திருக்குடும்ப கன்னியர் மடம்) அன்புக் கணவரும் ஜீவந்திகா, அனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி நாகேஸ்வரி பாலசிங்கம், நாகராஜா நவரட்ணம், நாகேந்திரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஓய்வுபெற்ற இசை ஆசிரியர் சங்கீத பூசணம் எஸ்.பாலசிங்கம், திருமதி நா.குணபூசணம், திருமதி நா.பத்மா, திருமதி ந.தேவகி, சண்முகலிங்கம், சத்தியலிங்கம், திருமதி தேவகி நந்தன், சாவித்திரி, கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவீடனில் 21.10.2000 சனிக்கிழமை நடைபெறுமென்பதை உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி அம்பிகா செல்வரட்ணம்

*தற்காலிக முகவரி :*
*235/1 பருத்தித்துறைவீதி,*
*ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம். (79634)*

*நிரந்தர முகவரி:*
*16, வில்வம்தெரு லேன்,*
*அரியாலை.*

# நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு ஜனநாயக முறையில் தேர்தல் நடத்துக!

## சபையில் ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு,ஒக்.19

கடந்த 17 வருடங்களாக நீதி, நியாயமற்ற மோசடியான தேர்தல்களே இலங்கையில் இடம்பெற்றுள்ளன. நாடு உண்மையில் ஜனநாயகத்துக்குத் திரும்ப வேண்டுமானால் நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனநாயக வழியிலான தேர்தல் ஒன்றை நடத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியும் முன்வரவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்த சங்கரி மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது இடம்பெற்ற விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நடந்து முடிந்த தேர்தல் வன்செயல்கள் மலிந்ததாகவே அமைந்தது. வடக்கில் தீவுப் பகுதியில் தனி ஆட்சி செலுத்தும் ஜனநாயகவாதிகள் என்று கூறுபவர்கள் பெரும் மோடிகளில் ஈடுபட்டனர்.

ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்களைத் தாக்கினர், மோசடிகளில் தாராளமாக ஈடுபட்டனர்.

77 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடத்தப்படவில்லை. நாடு ஜனநாயகத்துக்குத் திரும்ப வேண்டுமானால் நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு தேர்தலை நடத்த வேண்டும்.



இன்று அவசரகால நீடிப்பு எதற்கு? யுத்தத்தைத் தொடர்வதற்கே ஆகும். யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

வன்னி, யாழ்ப்பாணத்தில் யுத்தத்தால் படும் இன்னல்கள் சொல்லில் அடங்கா. ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் ஒரு நேர உணவுடன் வாழ்கின்றனர். இவற்றுக்குத் தீர்வு காண உடன் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (இ-3-8)

# அவசரகாலச் சட்டத்தை அரசு தேர்தல் வன்முறைக் கருவியாக்கியது

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. சாடல்

கொழும்பு,ஒக்.19

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற மோசமான வன்முறைச் சம்பவங்களுக்கு பொ.ஐ.முன்னணி அவசரகாலச் சட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியது. அதே சட்டத்தைத் தற்போது நீடிக்க அரசு பிரேரணையைக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய ஜே.வி.பி. அமைப்பின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நேர்மையற்ற - சுதந்திரமற்ற - தேர்தலொன்றையே அரசால் நடத்த முடிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக எத்தனையோ பொதுமக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

இவை எல்லாவற்றுக்கும் அவசரகாலச் சட்டத்தையே அரசு முக்கிய கருவியாகக் கையாண்டது.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கோ அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பதற்கோ எமது கட்சி எந்த நிபந்தனையையும் விதிக்காது. ஆனால் ஐக்கிய இலங்கைக்குள் சகல இனங்களையும் ஒன்றுபடுத்தி செயற்படுவதையே எமது கட்சி ஆதரிக்கும்.

அவசரகாலச் சட்ட நீடிப்பால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படவில்லை. மாறாக இலங்கையின் ஜனநாயகமே மழுங்கடிக்கப்படுகிறது - என்று கூறினார். (அ-8)

## புலிகளே தமிழ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நடைபெற்ற தேர்தல் அவசரகாலச்சட்டத்தின் கீழ் நடைபெற்றது. வடக்கு - கிழக்கில் படைகள் வசமிருக்கும் இடங்களில் தான் தேர்தல் நடைபெற்றது. விமானத்தாக்குதலாலும்,பல்குழல் ஷெல் தாக்குதல்களாலும் பல கணிசமான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட கையோடு அரசாங்கம் கண்மூடித்தனமான முறையில் விமானக்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களை நடத்தியது. வாக்காளர்களை வேறு இடங்களுக்குத் துரத்தி விட்டு குறிப்பிட்ட சில கட்சிகள் ஆள் மாறாட்டம் செய்யவும் கள்ளவாக்குப் போடவும் உதவுவதற்காகவே அரசுஅவ்வாறு தாக்குதல்களை நடத்தியது. தேர்தல் நேர்மையான நீதியான முறையில் நடைபெறவில்லை.மோசமான முறையில் ஆள்மாறாட்டமும், வன்செயல்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றிருந்தால் பெறுபேறுகள் வேறு விதமாக அமைந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் தேர்தல் நீதியான முறையில் நடைபெறவில்லை என்பதை உலகம் அறிய வேண்டும். இன்னமும் இராணுவக்கட்டுப்பாடற்ற இடங்களில் வாழும் தமிழ் வாக்காளர்களுக்கு தேர்தலில் பங்குகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

நாம் வேண்டுவது முழு நாட்டிலும் நிரந்தர நிலையான சமாதானமாகும். அப்படியான நிரந்தர சமாதானம் வேண்டுமானால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு கௌரவமான தீர்வு தேவை. தீர்வு தேவையானால் உடனடியாக போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பின்பு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசமைப்புச்சட்டம் திருத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் பங்களிப்பில்லாமல் நாட்டில் சமாதானம் ஏற்பட இயலாது. அவர்கள்தான் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமரர் குமார் பொன்னம்பலம் தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்து சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பி வந்தார். அந்தப்பணியை நாம் தொடர்வோம்.

குமாரின் படுகொலை குறித்து இன்னும் பூரணமானவிசாரணை எதுவும் நடத்தப்படவில்லை. அரசியல்வாதி ஒருவரின் மகன் அவரது தந்தையாருக்குத் தெரியத்தக்கதாக, குமார் பொன்னம்பலத்தைக் கொல்வதற்கு சமனுக்கு பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் பணம் வழங்கியதாக பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தன. முக்கிய பிரமுகர் ஒருவரின் மகன், மொரட்டுவ சமன் என்பவரை விடுவிப்பதற்கு குமாரின் உதவியை நாடியதாகவும் செய்திகள் வந்தன. அவ்வாறிருந்தும் விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை - என்றார். (அ)

## அமைச்சரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு, புனரமைப்புப் பணியுடன் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்துறை அமைச்சும் - வழங்கப்படவிருப்பதாகக் கூறப்பட்டது.

பேரியல் அஷ்ரப்புக்கு துறைமுக அபிவிருத்தி அமைச்சு வழங்கப்படலாம் என்றும் - பாதுகாப்பு, நிதி ஆகிய அமைச்சுக்களை ஜனாதிபதி தமது பொறுப்பில் வைத்திருப்பார் என்றும் - கூறப்பட்டது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா பிரதமர் பதவியுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியையும் ஏற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு மின்சக்தி, எரிபொருள் அமைச்சுப்பதவி மட்டுமே வழங்கப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது. (இ-3-8-10)

## சபாநாயகராக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவப் பேச்சாளருமான மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவின் பெயரை உப சபாநாயகர் பதவிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் ரிச்சார்ட் பத்திரான பிரேரித்தார். குருநாகல் மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் பியசோம உபாலி வழிமொழிந்தார்.வேறு எவரின் பெயரும் பிரேரிக்கப்படாததால் சரத் முனசிங்க உப சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். முதல் தடவையாக எம்.பியான ஒருவர் உப சபாநாயகர் பதவியைப் பெற்றது இதுவே முதல் தடவை என்று கூறப்பட்டது.

குழுக்களின் பிரதித் தலைவராக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லலித் திஸநாயக்கவை தேசிய ஐக்கிய முன்னணி இணைத்தலைவர் ரவூப் ஹக்கீம் பிரேரித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆமோதிக்க வேறு பிரேரணை இல்லாததால் அவர் தெரிவானார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமைப்பதில் இருந்து வரும் சிக்கல்களைத் தீர்க்க ஐ.தே.கவின் ஆதரவைப் பெறும் நோக்குடனும் -

நாடாளுமன்றத்தில் விவாதங்களின் போது ஐ.தே.க.உறுப்பினர்கள் வழமைபோல் கூச்சல் குழப்பம் விளைவிப்பதைத் தடுக்கும் நோக்குடனும் - அனுரா பண்டாரநாயக்கா ஏகமனதாகத் தெரிவாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உதவியுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-8-10)


இந்து சமயம்

திரு.சுரேஸ்

A/L 2001 - 2002

சனி, ஞாயிறு

D.M.I

யாழ்நகர் (C71392)



PERSONAL CLASSES

* துரித மீட்டல் வினாவிடை

* அசேதன இரசாயனம்

சாவகச்சேரி ஞானோதயாக் கல்வி நிலைய மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

CHEMISTRY - அன்பு

தொடர்பு:-

26, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

(ஆயர் இல்லம் அருகில்)

(79624)


# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சு!

## ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழு முடிவு

கொழும்பு,ஒக்.19

நாட்டில் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்துவது என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

நேற்று நடந்த நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.



ஜனநாயகத்தை நிலைநாட்டவும், புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கவும், நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாக்கவும், யுத்தத்தை நிறுத்தவும், பதினொராவது நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துவது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது. (இ-3)

# தனது இரு எம்.பிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கல்தா!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியில் சேரப் பேரம் பேசியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

திகாமடுல்ல உறுப்பினரும் கட்சியின் பிரதித் தலைவரான டாக்டர் உதுமாலெப்பை, திருகோணமலை மாவட்ட உறுப்பினர் மசூர் மௌலானா ஆகியோரே இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஐ.தே.கவின் கோடீஸ்வரர்களான இரு எம்.பிகளுடன் இவர்கள் பேச்சு நடத்தியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்திய முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு இருவரையும் கட்சியில் இருந்து இடை நிறுத்தியதுடன் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்று முடிவு செய்துள்ளது.

இருவரின் செயற்பாடு தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெிவித்தன.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை இருவரும் மறுத்துள்ளனர். (இ-3-8)

# ரத்வத்தவின் மகன் பிணையில் விடுவிப்பு

தேர்தல் வன்முறைச்சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸாரிடம் சரணடைந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் மகன் லொஹான் ரத்வத்த கண்டி மாவட்ட பிரதம நீதிவான் லியோன் செனிவிரத்னவின் உத்தரவின்பேரில் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்றைய நீதிமன்ற அமர்வின் போது சந்தேக நபரை பிணையில் விடுவிக்கக்கோரி சட்டத்தரணி நிலந்த வரலியத்தவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை அடுத்து நீதிவான் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

கண்டிப்பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முன்னால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் பட்டாசுகளைக் கொளுத்தியும் குழப்பம் விளைவிக்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் எதிர்வரும் 27ஆம் திகதிவரை லொஹான் ரத்வத்த உட்பட எட்டுப் பேரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-8-10)

## புதிய நாடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் 224 உறுப்பினர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகர், உப சபாநாயகர், குழுக்களின் தலைவர் ஆகிய பதவிகளுக்கான தெரிவுகள் நடைபெற்றன.

அதன்பின்னர் சபாநாயகர் அனுரா பண்டார நாயக்காவின் தலைமையில் புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது. அவ்வேளை பிரதான நிகழ்வாக அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை பிதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா சபையில் சமர்ப்பித்தார்.

பிரேரணை மீதான விவாதத்தில் அரசாங்கதரப்பில் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கா, எஸ்.பி.திஸநாயக்கா ஆகியோரும் -

ஐக்கிய தேசிய கட்சி சார்பில் லொக்கு பண்டாரா, காமினி அத்துக்கோறள, ஜோன் அமரத்துங்க ஆகியோரும் -

மக்கள் விடுதலை முன்னணி சார்பில் விமல் வீரவன்சாவும்

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வீ.ஆனந்தசங்கரியும் -

ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதனும் -

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தியும் -

தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் ரவூப் ஹக்கீமும் - உரையாற்றினர்.

பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெற்றவேளை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக அரசாங்க எம்.பிக்களுடன் சேர்ந்து ஈ.பி.டி.பி., தேசிய ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய ஆகியவற்றின் உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஆதரவாக 113 வாக்குகள் கிடைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளையும் மக்கள் விடுதலை முன்னணியையும் சேர்ந்த 19 உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

பிரேரணை 94 வாக்குகளால் நிறைவேறியது. (அ-3-8-10)

## யாழ்ப்பாணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர். ஆனால் அது பலிக்கவில்லை.

எவ்வாறாயினும் படையினர் மீது புலிகள் தாக்குதல நடத்தி வருகின்றனர். இதைத்தடுப்பதற்கே அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டியுள்ளது. பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கும் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கும் அவசரகால நிலை அவசியமாகும்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் தோன்றவேண்டும் என்பதும் மக்களின் அபிலாசைகளில் ஒன்றாகும். நீதி பேணப்படும் அதே சமயம் சரிவர அதனை அமுல்செய்யும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும்.

எந்த வகையிலும் அநீதிக்கு இடமளிக்கப்படமாட்டாது. நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதே அரசின் முக்கிய நோக்கமாகும். ஜனாதிபதியின் முழுமையான அங்கீகாரத்துடன் இதைக் கூறவிரும்புகிறேன் - என்றார். (இ-3-10)

## செம்மணியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் கண்ணியில் சிக்கியதில் இரு படையினர் கொல்லப்பட்டனர். ஏழு படையினர் காயம் அடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டிராக்டரும் சேதத்துக்குள்ளானது. (இ-3-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.